For Private Circulation Only

ECHOES INDIA

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

ஜுலை 2014

மலர் 7, இதழ் 4



## மணப்பாக்கத்திலிருந்து செய்திகள்

மே 2014

**பண்டாராவிற்குப்பின்னர்**: "பண்டாரா முடிந்துவிட்டது. அப்யாசிகள் ஆசிரமத்தை விட்டு சென்றுவிடுவர், இவ்விடமே வெறிச்சோடி இருக்கும்" என மாஸ்டர் வருத்தமுடன் கூறினார். விழாவின் மூன்று நாட்களுமே காலையில் மாஸ்டர் சத்சங்கம் நடத்தியது, இவ்விழாவின் சிறப்பு அம்சம் ஆகும். உடல் நிலை சீராக இருந்ததால், மாஸ்டர் தன் குடிலில் நடந்த கூட்டங்களிலும், கலந்துரையாடல்களிலும் இயன்றபோது கலந்து கொண்டார். மே 3 ம் தேதி சனியன்று காலை உணவிற்குப்பின் அநேக அப்யாசிகளை சந்தித்தார். அவர், ஒரு சிலருக்கு சிட்டிங் கொடுக்க விருப்பப்பட்டு, மற்றவர்களை வெளியே சென்று அமருமாறு கோரினார். நீண்ட நேர சிட்டிங்கிற்குப் பின், தன் அலுவலக அறையில் அப்யாசிகள் குழு ஒன்றுடன் உரையாடிக் கொண்டு காலை நேரத்தைச் செலவிட்டார்.

**புது கோல்ஃப் வண்டி**: புது கோல்ஃப் வண்டியும், தனியே பிரிக்க ஏதுவான ஒரு மின்னணு நாற்காலியும் மாஸ்டரின் உபயோகத்திற்காக தருவிக்கப்பட்டன. இதனால், சக்கர நாற்காலியை கோல்ஃப் வண்டியில் பொருத்தியவுடன், அது நாற்காலியை மாஸ்டருடன் உயர்த்தி, இருக்கையில் இதமாக அமரும் வண்ணம் செய்துவிடும். மாஸ்டர், இவ்வண்டியில் ஒரு சுற்று வந்து, அதன் செயல் திறமையால் கவரப்பட்டார். கோல்ஃப் வண்டி யில் ஏறுவதும், இறங்குவதும் இலகுவாக ஆனதினால், இன்னும் அதிகமாக அதில் சுற்றி வருவதை எதிர்நோக்கி உள்ளார்.

தன் பேரன் பார்கவ் ஊரில் இருந்ததால், மாஸ்டர், அவருடனும், குடும்பத்தாருடனும் நேரத்தை செலவழித்தார். அவர், ஓய்வெடுக்காமல் மாலை, 5:30 வரை பேசிக்கொண்டிருந்தபின், பார்கவ் ஓட்டிச்செல்ல, தன் புது கோல்ஃப் வண்டியில் வலம் வந்தார்.

சிலநாட்கள், மாஸ்டர் தன் இயல்பான வழக்கத்தைக் கைக் கொள்கிறார். காலை 5 மணிக்கு எழுந்து தியானம் செய்தபின், நாளிதழ்களை வாசிக்கச்சொல்லிக் கேட்டு, காலை உணவுக்குப்பின், மின்னஞ்சல்களை பார்வையிடுவார். இந்தியாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பாராளுமன்ற தேர்தல் நிலவரங்களின் செய்திகளை உன்னிப்புடன் கவனித்துக்கொண்டார். அவர் செய்திகளை பார்க்கும் போது, மிகுந்த அமைதியுடனும், ஆழ்ந்தும் ஒவ்வொன்றும் எப்படி நடக்கிறது என்பதைக் கவனிக்கிறார். முக்கியமாக வாக்களித்தவர்கள் மற்றும் விமர்சகர்களின் கருத்துரைகளையும், மிகுந்த ஆர்வமுடன் கேட்டார்.

**குரு சகோதரர்களின் குடும்ப வருகை**: பாபூஜி மகராஜின் குருசகோதர்களின் குடும்பம் ஒன்று, மாஸ்டரை சந்திக்க வந்திருந்தது. மாஸ்டர் மிகுந்த களைப்புற்று இருந்தாலும், அவர்களை சந்தித்து, தன் ஓய்வுவேளையிலும் அவர்களுக்கு சிட்டிங் கொடுத்தார்.

மஹாதேவ், மஹாபாரத், மற்றும் புத்தர் முதலிய தொலைக்காட்சி தொடர்களை மாஸ்டர் பார்த்துக்கொண்டிருக்கிறார். அவர் இந்நிகழ்ச்சிகளிலிருந்து நிறைய விஷயங்கள் கற்றுக் கொள்வதாகப் பல முறை கூறியுள்ளார். கூட இருக்கும்







சில அப்யாசிகளுக்கு ஹிந்தி புரியாததால் மாஸ்டர் நிகழ்ச்சியின் போதே வசனங்களை மொழிபெயர்த்து அவர்களுக்கு விளக்குவதுண்டு.

19 மே அன்று மாஸ்டர் ஒரு பண்கடை கட்டடத்திற்குச் (shopping mall) சென்று, நீண்ட நேரம் அங்கிருந்த பின்னர், சுமார் 2 மணிக்கு உணவகத்திற்குப் போய் சேர்ந்தார். அவர் அங்கு சுமார் பதினைந்து அப்யாசிகளுடன் மதிய உணவருந்தினார். மாஸ்டர் மிகக் குறைவாக உண்டபோதிலும், கூட இருந்தோர் போதிய அளவு உணவு உட்கொண்டனரா என்று உறுதிப்படுத்திக்கொண்டு ஒரு சிறப்பான விருந்தோம்புபவராக இருந்தார். துரதிஷ்டவசமாக இச்சிறு பயணம் அவரை மிகவும் களைப்படையச் செய்ததுடன் உடல் வலியையும் ஏற்படுத்தியது. அடுத்த இரண்டு நாட்கள் அவருக்கு ஜுரமாக இருந்ததால் டாக்டர்கள் அவருக்கு சிகிச்சையளித்தனர். சில நாட்களிலேயே அவர் குணமடையத் தொடங்கினார்.

**கற்பது - ஒரு தொடர்ச்சியான செயல்முறை:** 23 மே அன்று மாஸ்டர், சில ருசிய நாட்டு அப்யாசிகளை சிட்டிங் கொடுப்பதற்காக அழைத்திருந்தார். சிட்டிங்குக்குப் பிறகு மாஸ்டர், தாம் மறுபடியும் ருசிய மொழியைக் கற்றுக் கொள்ள ஆவலாக இருப்பதாகக் கூறினார். அவர், சகோதரர் அலெக்ஸேயிடம், தமக்குப் பாடங்களைப் பதிவு செய்யுமாறு கூறி, தாம் பின்னர் போட்டுக் கேட்பதாகக் கூறினார். பிறகு மாஸ்டர், "நானே பாடங்களை ஏற்படுத்தி பதிவு செய்து, பிறகு போட்டுக் கேட்டு கற்றுக் கொள்ளப் போகிறேன்" என்று கூறினார்.

சனிக்கிழமை, 24 மே 2014: புதுச்சேரியிலிருந்து சுமார் 60 அப்யாசிகள் வாரமுடிவிற்காக மணப்பாக்கம் வந்தனர். மாஸ்டர் 6 மணிக்கு காட்டேஜுக்கு வெளியே வந்து அவர்களுடன் சுமார் 45 நிமிடங்கள் அமர்ந்திருந்தார்.

ஞாயிற்றுக்கிழமை, 25 மே அன்று சகோதரி ப்ரியாவுக்கும் சகோதரர் க்ருஷ்ணாவுக்கும் திருமண ஆண்டு விழா இருந்தது. அன்று மாஸ்டர் காலை எழுந்தவுடன் பிரசாதம் வழங்கி, எல்லோருக்கும் கொடுத்தார். காலை 7 மணிக்கு அங்கிருந்த எல்லோருக்கும் ஒரு சிட்டிங் கொடுத்தார்.

மாஸ்டரின் உடல்நிலை ஏற இறங்க இருந்தது சிறிது கவலையளிப்பதாய் இருந்ததால், அவர் மருத்துவப் பரிசோதனைக்காக மியாட் ஆஸ்பத்திரிக்குச் சென்றார். பரிசோதனை முடிவுகள் சரியாகவே இருந்தன. மாஸ்டர் நரேந்திர மோடி பிரதமராகப் பதவியேற்ற விழாவை தொலைகாட்சியில் பார்த்தார்.

**லாலாஜி மெமோரியல் ஒமேகா சர்வதேசப் பள்ளி:** 10 வது மற்றும் 12வது வகுப்பு CBSE பரிட்சை முடிவுகள் அறிவிக்கப்பட்ட போது ஒமேகா பள்ளி நூறு சதவிகிதம் தேர்ச்சிகளைப் பெற்றது. 10வது வகுப்பில் CBSE பரிட்சைக்கு அமர்ந்த 142 மாணவர்களும் தேர்ச்சி பெற்றதுடன், ஒன்பது மாணவர்கள் CGPA (Cumulative Grade Point Average) - 10 பெற்றனர். மாஸ்டர் மிகவும் மகிழ்ச்சியடைந்து இச்செய்தியை எல்லோருக்கும் சொல்லிக் கொண்டிருந்தார்.





"நினைவு கூர்தல், அன்புக்குரியவரை அன்பு செலுத்துபவருக்கு அருகில் கொண்டு வருகின்றது. இந்த அருகாமைக்கு எல்லை இல்லை. மிகுந்த அன்பு அல்லது ஒத்துணர்வு ஒருவரை அவரை நோக்கி மேலும் மேலும் முன்னேற்றமடையச் செய்கின்றது. இந்த உறவுமுறையானது பரம்பரை உடமையாக நம்மிடம் வருகின்றது. இதனை வளர்த்து, கூடுமானவரை பாதுகாத்து, அவருடன் உச்சபட்ச அருகாமையை ஏற்படுத்திக் கொள்வது இப்பொழுது நம்மைச் சார்ந்ததாக உள்ளது."

பாபூஜி மகராஜ்

ராம் சந்த்ராவின் படைப்புகள்--தொகுதி-1; அத்தியாயம் "நியமம் 2"



## கேரள பிரிபெக்ட் கருத்தரங்கம்

மே 30, 31 மற்றும் ஜூன் 1, 2014

கேரளாவில் இருந்து, சுமார் 65 பிரிபெக்ட்கள் இந்த கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக மணப்பாக்கம் வந்து குழுமியிருந்தனர். முதல் நாள் அன்று இக்குழுவினரிடத்தில் சகோதரர் கம்லேஷ் உரையாற்றினார். அனைத்து நாட்களிலும், ஒவ்வொருவருக்கும் சிட்டிங் கொடுப்பது உட்பட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சியானது, கலந்துரையாடல் மற்றும் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுதல், மாஸ்டரது மேற்கோள்களைப் பிரதிபலித்தல் போன்றவற்றை உள்ளடக்கி இருந்தது. ஒரு வினா-விடை நிகழ்வானது, சகோ.ராஜேஷ் ரத்தோட் அவர்களால் நடத்தப்பட்டது. மேலும் சேவையைப் பற்றிய ஒரு பகுதியும் இருந்தது. தன்னையே ஆராய்ந்து கொள்வதன் முக்கியத்துவம், உரையாடலின் பொழுது மனதில் கொள்ள வேண்டிய கோட்பாடுகள் மற்றும் சேவை செய்யும்பொழுது, சகிப்புத்தன்மை மற்றும் கவனிக்கும் கலை போன்றவற்றை வலியுறுத்துவதாக இந்நிகழ்வுப் பகுதியானது இருந்தது. மேற்கூரையில் தோட்டம் அமைத்தல் செயல்பாடு இந்நிகழ்ச்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நூலகக் கட்டிடத்தின் மேல் தளத்தில் ஒரு காய்கறித் தோட்டம் அமைப்பதற்காக அனைத்து பிரிபெக்ட்களும் ஒன்று சேர்ந்து வேலை செய்தனர். மே 31 அன்று மாஸ்டர், அனைத்து பிரிபெக்ட்களையும் சந்தித்து அனைவருக்கும் ஒரு சிட்டிங் அளித்தார். இச்சந்திப்பானது ஞாயிறு அன்று இரண்டு வீடியோ நிகழ்ச்சிகளுடன் நிறைவு பெற்றது. ஒன்று - ஒரு மையத்தை, சிறிய ஆனால் பயன்மிக்கதொரு செயல்பாட்டின் மூலம் எவ்வாறு துடிப்பு மிக்கதாக ஆக்குவது என்பதைப் பற்றிய சகோ.கம்லேஷ் படேல் அவர்கள் ஆற்றிய உரையாகும். மற்றொன்று - மெருகூட்டுதல் பற்றி மாஸ்டர் ஆற்றிய உரையாகும்.

## ஒமேகா பள்ளியின் முன்னாள் மாணவர்களின் மூன்றாவது சந்திப்புக் கூட்டம்

கருத்தரங்கமானது, ஜூன் 9 அன்று, சகோ.கம்லேஷ் அவர்களால் சத்சங்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. பின்பு அவர்கள் அனைவரும் கருத்தரங்க வளாகத்தில் ஒன்று கூட்டப்பட்டனர். அங்கு சகோ.கம்லேஷ் அவர்கள் உரையாற்றினார். அந்த உரை சிறியதாக இருந்தபோதிலும், நன்கு தெளிவூட்டக்கூடிய விதமாக அமைந்திருந்தது. அடுத்து வந்த நாட்கள் அனைத்திலும், பார்வையிட வந்திருந்த அப்யாசிகளுக்கு மத்தியில் உரையாற்றுதல், தன்னார்வத் தொண்டு, வரவிருக்கின்ற கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு பயிற்சி மேற்கொள்ளுதல் மற்றும் முக்கியமாக தியானமும், பயிற்சியும் என பல்வேறு நிகழ்வுகள் இருந்தன. இந்நிகழ்ச்சிகளும், கருத்தரங்கமும் களிப்பூட்டுவதாகவும் அதே சமயத்தில் வாழ்க்கையின் பல்வேறு நோக்கங்களையும், நன்னெறி மதிப்பீடுகளையும் உள்ளடக்கியதாகவும், அவர்களை மேம்படுத்துவதாகவும் இருந்தது. 12ம் தேதி அன்று மாஸ்டர் குடிலில் அவர்கள் அனைவரும் மாஸ்டரிடம் இருந்து ஒரு சிட்டிங் பெற்றனர். அப்பொழுது, ஜூன் 14ம் நாளை, ஒமேகா பள்ளியின் முன்னாள் மாணவர் தினமாக அறிவித்து, மாஸ்டர் ஒரு சிறிய உரை நிகழ்த்தினார். ஜூன் 14 அன்று அவர்கள் அனைவரும் ஒமேகா பள்ளிக்கு வந்திருந்து, ஆசிரியர்கள் மற்றும் விடுதி காப்பாளர்களைச் சந்தித்தும், இளையோர்களை ஊக்கப்படுத்தும் விதமாக அவர்களுக்கு சிறு சிறு உதாரணங்கள் வழங்கியும் தங்களது நேரத்தை மிகவும் அருமையாகக் கழித்தனர். அதன் பிறகு மீண்டும் ஆசிரமத்திற்கு வந்திருந்து கலாச்சார நிகழ்ச்சிகளை ஆரம்பித்தனர். இந்நிகழ்ச்சி அனைவராலும் மிக அழகாக அரங்கேற்றப்பட்டது. மீண்டும் ஒருமுறை அவர்கள் அனைவரும் மாஸ்டரைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றனர். அப்பொழுது அவருடன் குழுவாக நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வானது மிகவும் மனநிறைவையும், நீங்கா நினைவைத் தருவதாகவும் இருந்ததாக அனைவரும் உணர்ந்தனர்.

## புதிய பிரிபெக்ட்களை தயார் செய்வதற்கான கருத்தரங்கம்

2014, மே 31 முதல் ஜூன் 14 வரை

பிரிபெக்ட்டிற்கு தயார் செய்வதற்காக இந்தியா முழுவதிலும் இருந்து சுமார் 27 பேர்கள் வரவழைக்கப்பட்டு, அவர்களைத் தயார் செய்யும் செயல்முறைகளின் ஒரு பகுதியாக இரண்டு வார கருத்தரங்கத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தயார் செய்யும் சிட்டிங்குகள் தவிர, அவர்களுக்கு காலை வேளையில் பயிற்சிப் பணிமனையும், மாலை வேளையில், தேர்ந்தெடுக்கப்பட்ட மாஸ்டரது வீடியோவும், பிரிபெக்ட்களின் வேலைகள் குறித்த சகோ.கம்லேஷ் அவர்களது வீடியோவும் காண்பிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, இதே தலைப்பிலான ஒரு கலந்துரையாடல், அவர்களை அக்கருத்துக்களில் மேலும் ஆழ்ந்து செல்ல வைத்தது. பங்கேற்பாளர்கள் அனைவரும், சத்யோதயம் புத்தகத்தின் சில பகுதிகளைக் குழுக்களில் கலந்துரையாடி பிறகு அதனை தொகுத்து வழங்கினர். இரண்டு பகுதிகள், தோட்டம் அமைத்து, அதனை சீர்படுத்துவதற்கான, அர்ப்பணிப்பு கொண்ட சேவைக்காக ஒதுக்கப்பட்டன. கருத்தரங்கத்தின் இறுதி நிகழ்வாக, ஒரு நாள் இரவு நிலவொளி விருந்தில், சகோ. கம்லேஷ் அவர்களுடன் தங்களுடைய நேரத்தைக் கழித்தனர்.



## எனது சகஜ மார்க்க அணுகுமுறை

பன்வேல், மும்பை

பெங்களூர் க்ரெஸ்ட் டைரக்டர் சகோ. மோகன்தாஸ் ஹெக்டெ 25 மே அன்று, தனது மும்பை பயணத்தின்போது சுமார் 80 அப்யாசிகளுக்கு பன்வேல் ஆசிரமத்தில் ஒரு கருத்தரங்கு நடத்தினார். ஒவ்வொருவரும் "எனது சகஜமார்க்க அணுகுமுறை" என்ற தலைப்பிற்கேற்ப தன்னாய்வு செய்து கொண்டு தற்போதைய மற்றும் பயிற்சி துவங்கிய சமயத்தில் சகஜ மார்க்க அணுகுமுறை பற்றிய தங்களது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

அவர், நாம் எடுத்துக்கொண்ட முதல் சிட்டிங்கானது மாஸ்டர் அவர்களால் அருளப்பட்ட மிகச் சக்திவாய்ந்த ஒன்று என்றும், அந்த நேரத்தில் நமக்குள் விதை விதைக்கப்பட்டதுடன் நமது ஆத்மாவும் விழிப்புணர்வு அடைகிறது என்றும் விளக்கினார். ஒவ்வொருவரும் மாஸ்டரின் இந்த பணியின் மதிப்பை உணர்கிறார்களா என்றும், தத்தமது ஆன்மீக முன்னேற்றப் பாதையில் பங்கேற்க தயாராகவுள்ளார்களா என்றும் வினவினார். மேலும் அவர் பிரார்த்தனை மற்றும் தெளிவான நோக்கம் கொண்டிருத்தலின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தினார்.

## பரமக்குடி மையத்தின் ZIC அவர்களின் பயணம்



தமிழ் நாட்டின் மண்டலப் பொறுப்பாளர் (2D) சகோ.P.இராமநாதன் 17 மே அன்று பரமக்குடி மையத்திற்குச் சென்றார். நிகழ்ச்சியில் பரமக்குடி, மானாமதுரை, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மையங்களைச் சேர்ந்த பிரபெக்ட்கள் உட்பட சுமார் 64 அப்யாசிகள் பங்கேற்றனர். காலை சத்சங்கத்தைத் தொடர்ந்து 20 அழைப்பாளர்களுக்கு ஒரு வரவேற்புக் கூட்டம் நடத்தப்பட்டது. தியானத்தின் நோக்கம், சகஜ மார்க்கத்தின் சிறப்பம்சங்கள் மற்றும் செயல்திறன்கள் போன்றவை பிரபெக்ட் சகோதரர்கள் இராமநாதன், ராதாகிருஷ்ணன், குமார் மற்றும் பாஸ்கர் போன்றவர்களால் பங்கேற்பாளர்களுக்கு விளக்கப்பட்டது. 10 அழைப்பாளர்கள் தியானம் தொடங்க விருப்பம் தெரிவித்ததுடன், அவர்களுள் எட்டு நபர்கள் உடனடியாக அறிமுக சிட்டிங்குகள் பெற்றுக் கொண்டனர்.

தியானம் மூலம் தாங்கள் பெற்றவை மற்றும் தங்களது அனுபவங்கள் பற்றி அப்யாசிகள் எடுத்துரைத்ததைத் தொடர்ந்து மாலைச் சத்சங்கத்துடன் இந்த நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

## IISc பெங்களூர் அப்யாசிகளின் மணப்பாக்கம் வருகை

இந்திய அறிவியல் நிறுவனம், பெங்களூர் வளாகத்தில் சுமார் 30 அப்யாசிகள் உள்ளனர். நிறுவனத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் மற்றும் பிரசெப்டரான சகோதரர் A.பெருமாள், ஜூன் 7 மற்றும் 8 ஆம் தேதிகளில் BMA மணப்பாக்க ஆசிரமத்திற்கு அந்த அப்யாசிகளுடன் சென்றார். அவர்கள் அங்கு தங்கியிருந்தபோது சத்சங்கங்களில் கலந்து கொண்டதோடு மட்டுமின்றி அவர்களில் இளைய அப்யாசிகள் தன்னார்வத்தொண்டாக உற்சாகத்துடன் மாம்பழங்களை பறித்தனர். முதல் நாள் மாலை மாஸ்டருடனான அவர்களின் சந்திப்பு, பயணத்தின் முத்தாய்ப்பாக அமைந்தது. அப்போது மாஸ்டர் அவர்கள் ஒவ்வொருவரையும் விசாரித்ததுடன் அனைவரையும் ஆசிர்வதித்தார்.

ஞாயிறு சத்சங்கத்திற்குப் பின்னர், அவர்கள் மிஷனின் பிரதான அப்யாசிகளான V.K.சோமகுமார், A.P.துரை மற்றும் அல்பெர்டோ லாப்ரேன்சி ஆகியோருடன் கலந்துரையாடினர். மாஸ்டர், மிஷன் மற்றும் பயிற்சிமுறை பற்றிய தங்களது பல்வேறு கேள்விகளுக்கும் பதில் பெற்றுக்கொண்டனர். அவர்களின் பதில்கள் மகிழ்ச்சி கரமான நிகழ்வுகளுடன் ஒன்றுகொன்று தொடர்புடைய மற்றும் சுய அனுபவங்களுடன் கூடியதாகவும் இருந்தது. குழுவின் அனைத்து உறுப்பினர்களும் அவர்களின் அப்யாசத்தை முன்பைவிட சிறப்பாக செய்வதற்கு ஆன்மீக ரீதியாக தாங்கள் உயர்த்தப்பட்டதாகவும் மிகவும் உற்சாகமூட்டப்பட்டதாகவும் உணர்ந்தனர்.





## பயிற்சியாளர் திறன் மேம்பாட்டு பயிலரங்கம் (FDP) கரக்பூர்

பிப்ரவரி 2014 ல் பாட்னாவில் மண்டல கூட்டம் நடைபெற்றது. அப்போது பீகார் மற்றும் ஜார்கண்டில் "பயிற்சியினை நிலைப்படுத்துதல்"(GITP) நிகழ்ச்சியினை மேலும் தீவிரப்படுத்த அதிக எண்ணிக்கையில் தன்னார்வ தொண்டர்கள் தேவை என்பதை உணர்ந்தனர். அதனைத்தொடர்ந்து பீகார்(34), ஜார்கண்ட்(22), மேற்கு வங்கம் மற்றும் சிக்கிம் வடக்கு (2) மற்றும் மேற்கு வங்கம் தெற்கு(18) ஆகிய இடங்களில் உள்ள பிரதிநிதிகளுக்காக பயிற்சியாளர் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியினை கரக்பூர் க்ரெஸ்டில் நடத்த, மண்டலப்பொறுப்பாள்ர் (மண்டலங்கள்17&20) சகோ.மனோஜ் திவாரியால் திட்டமிடப்பட்டது.

சகோதரிகள் நந்திதா மாத்தூர், சவி சிஸோடியா மற்றும் சகோதரர்கள் சந்தோஷ் ஸ்ரீநிவாசன், ஆல்பர்டோ லாபிரான்ஸி ஆகியோர் உதவியுடன் புதிய தன்னார்வ தொண்டர்களுக்கு பயிற்சி அளிக்க பயிற்சியாளர்கள் ஒன்று கூடினர். பங்குபெறும் பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு மட்டுமல்லாது தங்களுக்காகவும் நன்கு கற்று கடுமையாக உழைத்து நிகழ்ச்சியினைத் தயாரித்தனர்.

இந்நிகழ்ச்சி அனைவருக்கும் மிக்க பயன்தரும் வகையிலும், அதிக அளவு கற்றுக்கொள்ளும் வகையிலும் இருந்ததாக நிகழ்ச்சிக்குப்பின்னர் பெறப்பட்ட கருத்துக்களில் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிகழ்ச்சியில் புதிய விஷயங்களை அறிந்துகொள்ளுதல், வேடிக்கை, மகிழ்ச்சி, ஆழ்ந்த சிந்தனை, கடும் உழைப்பு, மிக முக்கியமாக சம்பந்தப்பட்ட அனைவரிடமும் நிலவிய சகோதரத்துவம் ஆகியவை இருந்தன. தற்போது GITP நடத்த 50 பயிற்சி யாளர்களும், 25 உதவியாளர்களும் தயாராய் உள்ளனர்.

## பிரிபெக்ட்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி, ஜபல்பூர்



"பிரிபெக்ட்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி" ம.பி (கிழக்கு & மேற்கு) மற்றும் விதிஷாவைச் சேர்ந்த பிரிபெக்ட்களுக்காக ஜபல்பூர் மண்டல 8b) ஆசிரமத்தில் ஜூன் 5 - 8 வரை சகோ.சந்தோஷ் ஸ்ரீனிவாசனால் நடத்தப்பட்டது. நிகழ்ச்சிக்கு மாஸ்டர் அளித்த கருப்பொருள், "உங்கள் இதயத்தினை மேன்மை படுத்த உங்கள் இதயத்தில் பணி செய்யுங்கள்" என்பது தான். இந்த நிகழ்ச்சியின் சிறப்பு அம்சம் என்னவெனில், இந்நிகழ்ச்சிக்காக எதுவும் தயார் செய்யாமல் அமைதியாக இதயத்தின் வழிகாட்டுதலின் கீழ் நிகழ்ச்சிகள் நடைபெற்றதுதான். பங்குபெற்ற அனைவரும் நிகழ்ச்சியினை புரிந்து கொண்டு பாராட்டினர் மேலும் அங்கு நிலவிய ஆன்மீகச் சூழலை அனுபவித்து மகிழ்ச்சியடைந்தனர்.

## தமிழ்நாடு (வடக்கு) மண்டலம்- மீண்டும் விழிப்புணரச் செய்தல்

2E மண்டலத்தில் மே 25ம் தேதி, சேலம், கிருஷ்ணகிரி, வேலூர் (வடவிரின்ஜிபுரம்), ஜூன் 1ல் ஹரூர் ஆகிய மையங்களில் "குண உருவாக்கத்திற்கான கருவியாக பத்து நியமங்கள்" என்ற தலைப்பில் விவாதிக்க, கூட்டங்கள் நடத்தப்பட்டன. சகோதரி எழிலரசி, சகோதரர்கள் ரகுபதி, சுதர்ஷன் மற்றும் முருகராசன் ஆகியோர், அப்யாசிகளுக்கு வழிகாட்டவும், தெளிவு படுத்தவும் அழைக்கப்பட்டிருந்தனர். நியமங்கள் 1 மற்றும் 3 எடுத்துக்கொள்ளப்பட்டன.

மாஸ்டர் மற்றும் பாபூஜியின் கருத்துக்கள், அவர்களிடம் நிலவிய உறவுமுறை பற்றிய தகவல்கள் ஆகியவற்றினை மேற்கோள் காட்டியதன் மூலம், நிகழ்ச்சிகள் அனைவர் மீதும் நல்ல தாக்கத்தினை ஏற்படுத்தின. ஒவ்வொருவரும் அவர்களது வாழ்க்கையின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதன் மூலமாக அனுபவ அறிவினைப் பெற்று மகிழ்ந்தனர். இதனை அனைவரிடமும் பரப்ப வேண்டும் என்ற உணர்வுடன் இல்லம் திரும்பினர்.



ஹரூர்



சேலம்



கிருஷ்ணகிரி

## தியான மண்டப திறப்பு விழா
**நவ்சாரி, குஜராத்**




குஜராத்தின் மிகப் பழமையான நவ்சாரி மையத்தின் புறநகரில், மிஷனுக்கு சொந்தமான மிகப்பெரிய இடம் உள்ளது. இந்த இடத்தில் தியானத்திற்கான வசதி வேண்டுமேன்று இம்மையத்தின் அப்யாசிகள் மிகுந்த ஆவலாயிருந்தனர். அவர்கள் அனைவரும், அவர்கள் கனவு நிறைவேற கடின உழைப்புடன் தற்காலி கமான தியான மண்டபத்தை கட்டிமுடித்தனர். மாஸ்டரின் அனுமதியுடன், 11 மே 2014 அன்று ZIC 6B சகோ. சுரேந்த்ர அகர்வால் அவர்கள் தியான மண்டபத்தை சத்சங்கம் நடத்தித் திறந்து வைத்தார். நவ்சாரி மற்றும் அருகிலிருந்த சிக்லி, பில்மோரா மற்றும் அமல்சாட் மையங்களிலிருந்து சுமார் 100 அப்யாசிகள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் அவர் ஆசிரமத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி பேசினார். மேலும் நேரம் ஓடிக்கொண்டிருப்பதால் நம் குறிக்கோளின் மீது கவனம் செலுத்தவேண்டும் மற்றும் ஒளிமையத்தை பயனுள்ள வகையில் உபயோகிக்க வேண்டும் என்றும் கூறினார். ஞாயிறு சத்சங்கம் நவ்சாரி மையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மாஸ்டரின் பிரசன்னத்தை அனைவரும் உணர்ந்தனர். நவ்சாரி மையத்தின் CIC சகோ.நிதின் ஹரியானி தன்னார்வத்தொண்டர்களின் கடின உழைப்பைப் பாராட்டினார். மேலும் வல்சத் மையத்தைச் சேர்ந்த தன்னார்வத்தொண்டர்களின் உழைப்பைக் குறிப்பிட்டார்.

## மண்டல கூட்டம், ஹரியானா

25 மே அன்று சோனேபட் ஆசிரமத்தில், மண்டலம் 21 ஹரியானா நடத்திய கூட்டத்திற்கு, அனைத்து மையங்களிலிருந்தும் பிரெசப்டர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், உதவியாளர்கள், தன்னார்வத்தொண்டர்கள் மற்றும் மையப்பொறுப்பாளர்கள் (CIC) பங்கேற்க அழைக்கப்பட்டனர். கூட்டத்திற்கு, Dr சத்யா N மொன்தல் தலைமையேற்றார். CICs அவர்களுடைய மையங்களைப் பற்றியும், மண்டல ஒருங்கிணைப்பாளர்கள், பயிற்சி மற்றும் வளர்ச்சி, U கனெக்ட், CREST, நன்னெறி கல்வி, கட்டுரை எழுதுதல், கணினி நுட்பங்கள், அப்யாசி



பதிவுசெய்தல், தன்னார்வத்தொண்டு, எக்கோஸ் செய்திமடல், வரலாற்றுப்பதிவு மற்றும் கணக்கு விவரங்கள் குறித்தும் கருத்துரை வழங்கினார்கள். இதற்குப் பிறகு, புதிய மையங்களின் வளர்ச்சியின் வழிகளைக் குறித்து கலந்துரையாடினர். கிடைக்கப்பெற்ற வளங்களை தகுந்த முறையில் பயன்படுத்தவும், புதிய மற்றும் தொலைவிலிருக்கும் மையங்களிலிருக்கும் அப்யாசிகளுக்கு சேவை செய்வதற்கும், மையங்களை 5 குழுக்களாக அமைப்பதற்கு முடிவுசெய்யப்பட்டது.

## மிஷன் செயற்பாடுகள் குறித்த பயிற்சி, ஷாஜஹான்பூர்



யோகாஷ்ரம் ஷாஜஹான்பூரில், 9-11 மே-யில், VBSE, வரவேற்புக்கூட்டம், இல்லங்களில் கலந்துரையாடும் நிகழ்ச்சி, கட்டுரை எழுதும் நிகழ்ச்சி ஆகியவற்றை எப்படி நடத்துவது என்பது பற்றி மூன்று நாள் கூட்டம் நடந்தது. இதில், 12B மண்டலத்திலிருந்து 11 பிரெசப்டர்கள், 41 அப்யாசிகள் பங்கேற்றனர். உரையாற்றியவர்களில் சகோ. உமாசங்கர் பாஜ்பாய் (செயலாளர்) மற்றும் சகோ.பிரபாத் குமார் (ZIC) இருந்தனர். பங்கேற்றவர்களிடம் புதிய ஆற்றலும், கருத்துக்களும் நிரம்பி இருந்தன. அவர்களுடைய மையங்களில் VBSE நிகழ்ச்சியைத் துவங்க முடிவெடுத்துக் கொண்டனர். கட்டுரை எழுதும் நிகழ்ச்சியைத் திட்டமிடுதல் குறித்தும் பங்கேற்றவர்கள் கலந்துரையாடினர்.

## இளைஞர்களுக்கான நிகழ்ச்சிகள்



### பனசங்கரி ஆசிரமம், பெங்களூரு

ஜூன் 2014, 14 மற்றும் 15 ஆம் தேதிகளில் பெங்களூருலிருந்து வந்திருந்த சுமார் 35 இளைஞர்களுக்கான ஒரு வார இறுதி குடியிருப்பு சார்ந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சனிக்கிழமை பெயர் பதிவிற்குப்பின், ஒரு விளையாட்டு மூலமாக அறிமுகமும், பின், "சிற்றலைகளும் பிரதிபதிப்புகளும்" ("Ripples and Reflections") மற்றும் "முன்கணிப்பும், தீர்ப்புக்கூறலும்" ("Prejudice and Judgement") என்ற தலைப்புகளில் ஒரு கருத்துரைப் பகுதியும் இருந்தன. ஒவ்வொரு பகுதியிலும், பங்கேற்பாளர்களுக்கு, சுயசோதனை செய்து கொள்வதற்கும், தங்களது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், அதனைத் தொடர்ந்து, அந்த தலைப்பில் ஒரு செயல் முறை நிகழ்ச்சி நடத்துவதற்கும் போதுமான அளவு கால அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த தலைப்பிற்கு சம்பந்தமாகவுள்ள மாஸ்டரின் சொற்பொழிவின் ஒலி ஒளிக்காட்சியும் காண்பிக்கப்பட்டது. மத்தியான வேளையில் சிறிது நேரம் தன்னார்வத் தொண்டில் கழிக்கப்பட்டது. "இயற்கைக்கு இயைந்தவாறு இருப்பது" என்ற பகுதி, எளிமையாக இருப்பது எப்படி என்பதையும், ஆசைகளின் படி வாழாமல், தேவைகளின் படி வாழ்வது எப்படி என்பதையும், எடுத்து இயம்பியது.

ஞாயிற்றுக்கிழமையன்று, நிகழ்ச்சியின் முதல் பகுதியில், மூத்த அப்யாசிகளைக் கொண்ட ஒரு குழுவுடன் நடந்த உரையாடலில், சகஜ மார்க்கத்தை எப்படி பரப்புவது, வாழ்வில் நடுநிலைமையை எப்படி கடைபிடிப்பது, தன்னார்வத் தொண்டினை எப்படி ஊக்குவிப்பது என்பது போன்ற தலைப்புகள் இருந்தன. மதிய உணவிற்குப் பின் ஒரு சகோதரர் "வரவேற்பு மேடை" (Welcome Desk) சகஜ மார்க்கத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வருபவர்களுடன் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப்பற்றி சுருக்கமாக விளக்கினார். இந்த வேலையைச் செய்வதற்கு ஆர்வமுள்ளவர்களுக்கு அதற்கான பயிற்சியும் வழங்கப்படும் என்பதையும் அவர் அறிவித்தார். இறுதிப் பகுதியாக, மற்றவர்களுடன் தகவல் தொடர்பு கொள்வதற்கான திறமையின் முக்கியத்துவம், ஒரு விளயாட்டின் மூலமாக வெளிக்கொணரப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஊக்குவிக்கும் வகையிலான ஒரு சில உதாரண வீடியோ உரைகளும் காண்பிக்கப்பட்டன. அவர்கள் சிறு குழுக்களாகப் பிரிந்து "Pick and Talk" என்ற பகுதியில் பங்கேற்ற பொழுது இது அவர்களுக்கு சில நல்ல யோசனைகளைத் தந்தது. ஒவ்வொரு குழுவும், அதற்குப் பிறகு, கொடுக்கப்பட்ட ஆலோசனைக் கருத்துக்களைக் கவனத்தில் கொண்டு, கூறப்பட்ட தலைப்புக்களில் பேசுவதற்கு ஒருவரைத் தேர்ந்தெடுத்தது. அந்த நிகழ்வு முடிவிற்கு வரும் போது, பங்கேற்பாளர்கள் இந்த முன்னோடி நிகழ்வில் கலந்து கொண்டதில் தங்களது மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தினர்.



### பில்வாரா, ராஜஸ்தான்

13அப்யாசிகள் கலந்து கொண்ட ஒரு இளைஞர்களுக்கான கூட்டம் பில்வாரா மையத்தில், 2014 ஏப்ரல் மாதம் 27 ஆம் தேதி நடைபெற்றது. பங்கேற்பாளர்கள், பண்டாராக்களில் கலந்து கொள்ளும் போது தாங்கள் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். மேலும், அது போன்ற நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு தங்களை எவ்வாறு தயார் செய்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் கலந்துரையாடினர். பண்டாரா கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்கு முன்னால் ஒவ்வொரு அப்யாசியும் குறைந்தது இரண்டு ’சிட்டிங்கு’களாவது எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டது. முக்கியமாக, பண்டாராவில் பெறும் நிலைமையை எப்படி கூடுமானவரை அதிக நாட்கள் தக்க வைத்துக் கொள்வது என்பதைப் பற்றியும் கூறப்பட்டது. அவர்கள் தங்களை பண்டாராவில் கலந்து கொள்வதற்கு, அது திருப்பூரில் இருந்தாலும் சரி, பில்வாராவில் இருந்தாலும் சரி, தங்களைத் தயார் செய்த் கொள்வதற்கு முடிவு செய்தனர்.

### விஜயவாடா, ஆந்திரப்பிரதேசம்

ஒரளவிற்கு பெரும்பாலான எண்ணிக்கையில் இளைஞர்களும், பிற அப்யாசிகளும் 2014 மே மாதம் 11 ஆம் தேதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இளைஞர்களுக்கான கருத்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். "குண உருவாக்கம்" ("Character Formation") மற்றும் ("The Role of Money in the life of an Abhyasi") "அப்யாசியின் வாழ்க்கையில் பணத்தின் பங்கு" என்பவை தலைப்புக்களாக அமைந்தன. தன்னுடைய தொடக்கவுரையில், மையப் பொறுப்பாளர், இளைஞர்களை மேலும் நன்கு கவனத்துடன் இருக்கும்படியும், தங்களது கடமைகளை ஆற்றுவதற்கு, நன்கு செயல் படுவதற்கு ஆர்வத்தோடு இருக்கும்படியும் ஆன்மீகத்தைத் தழுவி வாழும் வாக்கைக்கு மிகவும் தேவையாக இருக்க



வேண்டிய, முன்கணிப்பில்லாது, ஒழுங்குநெறி தவறாது இருக்கும்படியும் நன்மதி கூறினார். சகோ. ராம்சந்திரா தன்னுடைய சொற்பொழிவில், நன்னடத்தையை அமைத்துக்கொள்வதில் மனித மனத்தின் உணர்வுநிலையை சில உதாரணங்கள் வாயிலாக எடுத்து இயம்பினார். குழு விவாதத்தை தொடர்ந்து இளைய அப்யாசிகளால் பத்து தொகுப்புரைகள் வழங்கப்பட்டன. அவை, பொதுவான கருத்துக்களை உள்ளடக்கிய ஒருவரது உள்ளார்ந்த அனுபவங்களை மிக ஆரோக்கியமான விதத்தில் கலந்து விஷயங்களை உணரும் வகையில் இருந்தன. அப்யாசிகள் அனைவரும், பல்வேறு கருத்துக்களில், எதிர்கால தீவிர முயற்சிக்கு மிகப்பெரிய அளவில் பயனளிக்கக்கூடிய வகையில், மிகவும் உயரிய உள்நோக்கினைப் பெற்றதாகக் கூறினர். கருத்தரங்கின் உச்சக் கட்டமாக, அன்பைப் பற்றிய செய்தியை வழங்கிய மாஸ்டரின் வீடியோ உரை ஒன்று இருந்தது. தெய்வீக உணர்வு முழுவதுமாக உணரப்பட்டது.



## கோத்தகுடேம், ஆந்திரப்பிரதேசம்

ஆன்மீக மதிப்புகளை பலப்படுத்தி, புரிந்து கொள்ளுதலை ஏற்படுத்தவும், மிஷன் செயல்பாடுகளில் அக்கறை உணர்வை மேம்படுத்தவும், செயலாக்கம் மிக்க இளைஞர் நிகழ்வு ஒன்று, கோத்தகுடேம் ஆசிரமத்தில் 2014, 20 ஏப்ரல் அன்று நடைபெற்றது. அஸ்வாபுரம், பத்ராசலம் மற்றும் போல்வஞ்சா மையங்களின் இளைஞர்கள் பங்கேற்ற, கலந்துரையாடலுடன் கூடிய முழுநாள் நிகழ்வு. ஏன் இளமைப்பருவம் முன்னேற மற்றும் முயற்சிக்கு உகந்த காலம்? இளைஞர்களாக உங்களுடைய தொலைநோக்குப் பார்வை எப்படி இருக்க வேண்டும்? இளைஞர் குழுக்களின் அமைப்பு மற்றும் நோக்கம் எப்படி இருக்க வேண்டும்? எந்த விதமான செயல்பாடுகள் நடத்தினால், சகஜ மார்க்க இளைஞர்களை ஊக்குவித்து, ஒன்றிணைக்க முடியும்? மிஷனுடைய செயல்பாடுகளுக்கு இளைஞர்கள் எவ்வாறு பங்களிக்க முடியும்? என்ற கருத்துக்களை மையமாக கொண்டு இருந்தது. மற்றவர்களுக்குச் சிறந்த உதாரணமாக இருக்க, நமது மனம் மற்றும் உடல் பலத்தை எவ்வாறு உபயோகிப்பது என்பதைப் பற்றிய தங்களது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டதில் அனைவரும் மகிழ்ச்சியுற்றனர். இக்கருத்துக்களனைத்தும், செயல்பாடுகள் மூலமாகத் தெரிவிக்கப்பட்டதால், இளைய அப்யாசிகள் முழுமையாகப் பங்கேற்க முடிந்தது.

## வாரணாசி, உத்தரப்பிரதேசம்

முழுநாள் நிகழ்வானது வாரணாசி மையத்தில் 2014, 11 மே அன்று நடத்தப்பட்டது. அப்யாசிகள் மிஷன் புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில், தேர்ந்தெடுக்கப்பட்ட புத்தகங்களிலிருந்து வினாடி-வினா நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இறுதியாக இரண்டு பகுதிகளுக்கு, "என் மாஸ்டர்" புத்தகம் தேர்ந்தெடுக்கப்பட்டது. 50 கேள்விகளுக்குப் பதிலளிக்க, 30 நிமிடங்கள் கொடுக்கப்பட்டன. அதன் பின் சரியான விடைகள் கூறப்பட்டன. புத்தகங்களைக் கூர்ந்து படிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர். மதிய உணவுக்குப்பின், "என் மாஸ்டர்" புத்தகத்தின் தலைப்புகள் கலந்துரையாடப்பட்டன. இதன் விளைவாக அப்யாசிகள் அனைவரும் முழுநாள் நிகழ்வினை மகிழ்ச்சியாக அனுபவித்தனர். அதன் காரணமாக மாலை சத்சங்கத்தின் வருகைப்பதிவானது அதிகரித்தது.

## இதயத்திலிருந்து இதயத்திற்கு, இந்தூர், மத்தியப் பிரதேசம்

இதயத்திலிருந்து இதயத்திற்கு நிகழ்ச்சியானது இந்தூர் ஆசிரமத்தில், ஜூன் 15, 2014 அன்று நடைபெற்றது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் ஒரு மாதத்திற்கு முன்பே தொடங்கப்பட்டு, தங்களுடைய சமூகத்தில் மற்றும் நண்பர்களில், ஆன்மீகத்தில் ஆர்வமாக இருக்கும் சுமார் 300 நபர்களின் பெயர் பட்டியலை அப்யாசிகள் தயாரித்து, அவர்களுக்கு, நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அழைப்பு விடுத்தனர். தன்னார்வத் தொண்டர்கள் தொடர்ந்து பணி மேற்கொண்டதால், அதிகபட்ச மக்கள் பயன்பெற முடிந்தது.

ஜூன் 15 அன்று, சுமார் 180 பேர் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். ’ஆன்மீகம் - வாழ்வின் மிக முக்கியமான தேவை’ என்ற பிரதான உரையானது, விரிவாகவும், எடுத்துக்காட்டுகளுடனும் கையாளப்பட்டது. அதைத் தொடர்ந்து, ’சகஜமார்க்கமும் அதன் தத்துவங்களும்’ என்ற கருத்துரை இருந்தது. கேள்வி பதில் நிகழ்விற்குப் பிறகு சுமார் 40 பேர், சகஜ மார்க்கத்தில் சேர ஆர்வம் தெரிவித்தனர். அறிமுக தனித்தியானத்தை ஒருங்கிணைப்பதற்காகவே அங்கு ஒரு தன்னார்வ அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. மதிய உணவு இடைவேளையின் பொழுது பத்து பேர் கொண்ட அப்யாசிகள் குழுவானது அவர்களிடையே நெருக்கமாகவும், அவர்களுக்கு தெளிவுபடுத்தும் வகையிலும் பதிலளித்து கலந்துரையாடினர்.

அந்த நிகழ்வானது உண்மையாகவே மாஸ்டருக்கு சேவை செய்வதற்கான ஒரு வாய்ப்பாக இருந்தது. 30 சகோதர, சகோதரிகள் கொண்ட குழுவானது, இந்த நிகழ்ச்சி வெற்றிபெற ஏற்பாடுகளை செய்திருந்தனர்.





# கோடை முகாம்கள்

ஏப்ரல் மற்றும் மே மாதங்களில், இந்தியாவின் பல்வேறு மையங்களில், ஆர்வமுள்ள தன்னார்வத் தொண்டர்களால் கோடை முகாம்கள் நடத்தப்பட்டன. அவர்கள் தங்களால் இயன்ற அளவு நிகழ்ச்சியை வெற்றிகரமாக நிகழ்த்த முயன்றனர். குழந்தைகளுக்கு நல்லொழுக்க நன்னெறிகளை ஊக்குவிப்பதே முகாம்களின் நோக்கமாகும். போட்டோகிராபி பயிலரங்குகள், இசை, வண்ணமிடுதல், கதை சொல்லுதல், ட்ரெஷர் ஹன்ட்ஸ், காகிதப்பை செய்தல், திரைப்பட நேரம், கேள்வி-பதில்கள், ஆடல் பாடல், சிறு அறிவியல் கண்காட்சி, டை டையிங், அனிமேஷன், காகித நகைகள் செய்வது போன்ற பல நிகழ்ச்சிகள் குழந்தைகளை முழுமையாக ஈடுபடுத்த வைக்கப்பட்டிருந்தன. நன்னெறி அடிப்படையிலான தலைப்புகளில், டம்ப் சராட், நாடகம் போன்ற பல விளையாட்டுகள், நிகழ்ச்சிகள் மற்றும் செயல்பாடுகள் நன்னெறிகளை விளையாட்டாக குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்க உதவின. வளர்ந்த குழந்தைகளுக்கு கலந்துரையாடல்கள், கருத்துரை வழங்குதல் மற்றும் கல்வி சம்பந்தப்பட்ட வீடியோக்கள் காண்பிக்கப்பட்டன. சில மையங்களில் இவை இளம் தலைமுறையினர் ஆன்மீகத்தில் அறிமுகமாக வழிவகுத்தது.

BMA பான்வெல், **மும்பை**யில் 3நாள் முகாமில் 110 குழந்தைகள் கலந்து கொண்டனர். இறுதி நாளன்று ஒருவர் இன்னொருவரை பற்றி ஏதேனும் ஒரு நேர்மறையான தன்மை ஒன்றை ஒரு கைக்குட்டையில் எழுதுமாறு கூறப்பட்டது. அதனை அவர்களே நினைவுப் பொருளாக எடுத்தும் சென்றனர். கர்நாடகாவைச் சேர்ந்த **ராய்ச்சூர்** ஆசிரமத்தில், சுமார் 30 குழந்தைகள் முகாமில் பங்கு கொண்டனர். நிகழ்ச்சிகள் மிகுந்த மகிழ்ச்சியாக மட்டுமில்லாமல், நிறைய கற்கவும் முடிந்தது என்று அவர்கள் கூறியதுடன், நிகழ்ச்சியை மேலும் சில நாட்களுக்கு நீட்டிக்குமாறும் நடத்துபவர்களிடம் தாழ்மையுடன் கேட்டுக் கொண்டனர்.

உத்திர பிரதேசத்தைச் சேர்ந்த **சீத்தாப்பூரில்**, பல்வேறு பள்ளிகளிலிருந்து 60 மாணவர்கள், 9 நாள் கோடை முகாமில் கலந்து கொண்டனர். **பிகானரில்** ஒரு ட்யூஷன் மையத்தில், U-கனெக்ட் குழுவால், 10 நாள் முகாமொன்று நடத்தப்பட்டது. இளம் தலைமுறையினருக்கு ஆன்மீகத்தை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பொது விழிப்புணர்வு மற்றும் சுய வளர்ச்சி சம்பந்தப்பட்ட தலைப்புகளில் உரைகளும், அது சம்பந்தப்பட்ட பல நிகழ்ச்சிகளும் தொடரப்பட்டன.

சுமார் 60 குழந்தைகள், கர்நாடகா, **பெங்களூரைச்** சேர்ந்த பனசங்கரி ஆசிரமத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முகாமில் கலந்து கொண்டனர்.

ஆர்வமூட்டும் தலைப்புகள் மற்றும் குதூகல நிகழ்ச்சிகளுக்குக் கூடுதலாக, தமிழ்நாடு **திருச்சி** ஆசிரமத்தில் நடைபெற்ற முகாமில், 'தீ பாதுகாப்பும், தற்காப்பு நடவடிக்கைகளும்' என்ற நிகழ்ச்சி வழங்கப்பட்டது. குழந்தைகளை ஜானகி பண்ணைக்கு அழைத்துச் சென்று, வெல்லம் தயார் செய்வதை காண்பித்தது, ஒரு சுவாரசியமான விருந்தாக அமைந்தது.

**மணப்பாக்கத்தில்** நடந்த 3 நாள் முகாமில் பங்கேற்ற ஒவ்வொருவருக்கும் மரக்கன்று ஒன்று வழங்கப்பட்டு, அதனை வீட்டில் அன்பு ஊட்டி தாங்கள் வளரும் போதே அதனையும் வளர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டது. இது அவர்களது வாழ்க்கையில் ஒரு சமநிலையை ஏற்படுத்த ஊக்குவிப்பதற்கே. மேபோல் நடனம், மே மாதம் இறுதி நாட்களில் நடக்கின்ற ஐரோப்பிய போக் நடனம் போன்றவற்றிலும் முகாமை நடத்தியவர்கள் ஈடுபட்டனர். அனேகமாக அனைத்து குழந்தைகளும், அன்றைய தின அனுபவங்களையும், அந்த நித்தியமான நொடிகளுக்குப்பின் உள்ள சிந்தனைகளையும் முகாம் நாட்குறிப்பில் குறித்துக் கொண்டனர். நன்றியுணர்வின் அடையாளமாக குழுப்







புகைப்படம், குழந்தைகளால் செய்யப்பட்ட காகிதப்பை மற்றும் மரக்கன்று ஆகியவை மாஸ்டரின் அன்பான அருளுக்காக அவரிடம் வழங்கப்பட்டது.

**கோலா கோக்ரான் நாத்** ஆசிரமத்தில், 10 நாட்கள் முகாமில் 51 ஆர்வமுள்ள குழந்தைகள் கலந்து கொண்டனர். முகாமில் யுனெஸ்கோ புத்தகத்தில் இருந்து "வாழ்வதற்காக கற்றல்" என்ற பாடங்களுக்கு தினமும் அப்யாசி சகோதர சகோதரிகளால் விளக்கங்கள் அளிக்கப்பட்டது. அதே நேரத்தில் ஆரோக்கியம், பாதுகாப்பு, வங்கி, காடுகள், காவல் துறை, இரயில்துறை ஆகிய துறைகளில் சிறந்து விளங்குபவர்கள் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டு உரையாற்றினர்.

ஆந்திரப்பிரதேசம், **விசாகப்பட்டினத்தில்** 3 நாட்கள் முகாமில் வெவ்வேறு வயதுடைய 120 குழந்தைகள் கலந்து கொண்டனர். நன்னெறி அடிப்படையிலான செயல்பாடுகளுடன், பொம்மை மாதிரிகள் மற்றும் செய்தித்தாளில் பட்டம் செய்தல் ஆகியவையும் இருந்தன. பங்கேற்பாளர்கள், மருத்துவ முதலுதவி மற்றும் பாதுகாப்பு பற்றியும் கற்பிக்கப்பட்டனர்.

மத்தியப்பிரதேசம் **இந்தூரில்** 40 குழந்தைகள் முகாமில் கலந்து கொண்டனர். ஒருமைப்பாடு மற்றும் சகோதரத்துவம் பற்றிய மனப்பான்மைகளை வளர்த்துக் கொள்ளும் வகையில் ஒவ்வொரு நாளும் குழுப்பாடல் பாடப்பட்டது. இறுதி நாளன்று குழந்தைகள், இந்தூரில் புதிதாக வாங்கப்பட்ட மரங்கள் நிறைந்த ஒதுக்குப்புறமாக உள்ள ஆசிரம நிலத்தில் விருந்து உண்டு மகிழ்ந்தனர்.

குழந்தைகள் ஒவ்வொரு வருடமும் கோடைக்கால முகாமில் கலந்து கொண்டிருக்கும் தங்கள் மகிழ்ச்சியை ஆர்வத்துடன் வெளிப்படுத்தினர். பெரும்பாலான மையங்கள் முகாமின் காலத்தை நீட்டிக்குமாறு கேட்டுக்கொண்டனர். முகாமில் கலந்துகொண்ட தன்னார்வத் தொண்டர்கள் முதலாக அனைவருக்கும் முகாம் ஒரு நல்ல கற்றல் மற்றும் மகிழ்ச்சியான அனுபவத்தை வழங்கியது.

## அறிவிப்புகள்

மேற்கு வங்காளத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் கரக்பூர் க்ரெஸ்ட் மையம் இப்போது முதல் ஓய்வு மையமாக இருக்கும். இது ஏற்கனவே இயக்கத்திலிருக்கும் கேரளாவில் உள்ள மலம்புழா, மகாராஷ்டிராவிலுள்ள புனே மையங்களோடு கூடுதலாக சேர்க்கப்படுகிறது. இந்த கரக்பூர் ஓய்வு மையம் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதி அப்யாசிகளின் தேவைகளை முதலில் பூர்த்தி செய்யும். பெங்களூரிலுள்ள க்ரெஸ்ட் தனது செயல்பாடுகளான ஆராய்ச்சி, கல்வி, சாதனா, மற்றும் பயிற்சி செயல்பாடுகளை தொடர்ந்து செய்யும். தற்சமயத்திற்கு, இந்தியாவில் இத்தகைய மையம், இது ஒன்றே ஆகும்.

## பில்வாரா, இராஜஸ்தான்

பில்வாரா மையத்தில் குழந்தைகளுக்கான நன்னெறிகள் பற்றிய இரண்டு நாட்கள் முகாம் நடந்தது. மே 11 அன்று ஒரு திரைப்படம் ஒளிபரப்பப்பட்டு அதன் பிறகு பங்கேற்பாளர்களின் பங்கை அதிகரிக்கும் வகையில் சில விளையாட்டுகள் நடத்தப்பட்டது. மே 17 அன்று நடந்த நிகழ்ச்சியில் 13 - 17 வயது வரையிலான சுமார் 80 இளவயதினர் மற்றும் 15 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சி மாஸ்டரின் வீடியோவுடன் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து நன்னெறி சம்பந்தமான வீடியோக்கள் ஒளிபரப்பப்பட்டது. பங்கேற்பாளர்களிடம் வீடியோ நிகழ்ச்சியில் பெற்ற செய்தியை பகிர்ந்து கொள்ளும்படி கேட்கப்பட்டது.

மதிய உணவிற்குப்பிறகு மாஸ்டரின் உரை ஒளி பரப்பப்பட்டது. நேர்மறையான மனப்பான்மைகளின் தேவைகளைப் பற்றிய உரையைத் தொடர்ந்து அன்பு, கனிவு, தியாகம் மற்றும் நிஜ வாழ்க்கையின் நிகழ்வுகளை உடனடி நாடகங்களாக நடத்திக்காட்டினர். ஒரு குழல் மற்றும் பந்தைக் கொண்டு இலட்சியத்தின் அவசியம், சகோதரத்துவம், அன்பு, குழுவுணர்வு மற்றும் நல்லிணக்கம் ஆகியவைகளைப்பற்றி ஒரு விளையாட்டு அனைவரின் முன் நிகழ்த்தப்பட்டது. இறுதி நிகழ்ச்சியில் குருவின் முக்கியத்துவம் பற்றி கலந்துரையாடப்பட்டது. ஒவ்வொருவரும் முழு நிகழ்ச்சியையும் நன்றாக அனுபவித்தனர்.








## மும்பை, மகராஷ்டிரா

மே 23, 2014 அன்று, ஜுஹு, பில்லாபாங் பன்னாட்டுப் பள்ளியில், சுமார் 25 ஆசிரியர்களுக்கு, நன்னெறி அடிப்படைக் கல்வியைப் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. பள்ளி முதல்வர், நன்னெறி அடிப்படையிலான வகுப்புகளை நடத்த, சுய சேவகர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார். சகோதரி ராக்கி அரோராவின் நன்னெறி கல்வியைப் பற்றிய முன்னுரையுடன் நிகழ்ச்சி தொடங்கியது. இன்றைய சமுதாயத்தின் மீது தீய வினைகளின் தாக்கம், மற்றும் குழந்தைகளின் மனோபலத்தை அதிகப்படுத்தும் வகையில், வீட்டிலும், பள்ளியிலும் அளிக்கப்படவேண்டிய நன்னெறிக் கல்வியின் அவசியம் பற்றி சகோதரி லலிதா உரையாற்றியதைத் தொடர்ந்து, ஒரு தந்தை மகனைப் பற்றிய கதையின் வீடியோ காண்பிக்கப்பட்டது. இதயத்தைத் தொட்ட அக்கதையினைப் பார்த்த ஆசிரியர்கள், பெற்றோர்களும், ஆசிரியர்களும், குழந்தைகள் புரிந்து கொள்ள நேரமளித்து, அவர்களை நல்வழிப்படுத்துவதன் தேவையை உணர்ந்தனர். நிகழ்ச்சிக்குப்பின் சுயசேவகர்களுடன் உரையாடிய சில ஆசிரியர்கள், தியானத்தைப் புரிந்து கொண்டு அதைத் தொடங்குவதில் ஆர்வம் காட்டினர்.

## கர்கலா, கர்நாடகா

ஜூன் 1, 2014 அன்று, கர்கலா மையத்தில் நடந்த ஒரு நாள் நிகழ்ச்சியில், 12 அப்பாசிகள் கலந்து கொண்டனர். மாஸ்டரின் ஒரு வீடியோ உரைக்குப்பின், நிகழ்ச்சியின் கருப்பொருளான, 'சகஜ மார்க்கத்தில் மனப்பாங்கின் பங்கு' என்பதன் அறிமுக உரையில், சரியான மனப்பாங்கின் தேவை மற்றும் பத்து நியமங்களின் பயிற்சி மூலம் அதை மேம்படுத்திக் கொள்ளுதல் என்பது பற்றி சகோதரி நளினி எடுத்துரைத்தார். வாழ்க்கையின் குறிக்கோள் மற்றும் தினசரிப் பயிற்சியைப் பற்றிய சில கேள்விகளின் அடிப்படையில் தங்களை சீர் தூக்கிப் பார்க்கும்படி பங்கேற்றவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். நேர்மறை மனப்பாங்கின் தேவையை வலியுறுத்திய சகோதரி, நம் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் சில விஷயங்களைப் பற்றியும் கூறினார். மாஸ்டரின் பல்வேறு உரைகளின் செய்திகள் இக்கருத்துரையில் மேற்கோள் காட்டப்பட்டன. மதிய உணவுக்குப்பின், குழுக் கலந்துரையாடல் மற்றும் 'மனப்பாங்கு' பற்றிய கதைகள் ஆகியவை இருந்தன. நிகழ்ச்சியின் முடிவில், அப்யாசிகள் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, அக்கதைகளின் அடிப்படையில் இரு குறு நாடகங்கள் நடத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். மாலை சத்சங்கத்துடன் நிகழ்ச்சி முடிவடைந்தது.



## சோழவந்தான் ஆசிரமம், தமிழ் நாடு



மே 25ம் தேதி, மதுரை, வாடிப்பட்டி, உசிலம்பட்டி, சின்னாளப்பட்டி மற்றும் வத்தலக்குண்டு ஆகிய இடங்களில் இருந்து, 'சகஜ மார்க்கமும் குடும்ப வாழ்க்கையும்' என்ற கருப்பொருளைப் பற்றிய ஒரு நாள் நிகழ்ச்சிக்காக, 150 அப்யாசிகள், சோழவந்தான் ஆசிரமத்தில் ஒன்று கூடினர்.

சென்னையில் இருந்து சகோதரி கஸ்தூரி வெங்கடாசலம், மதுரையிலிருந்து சகோ. பழனியப்பன் மற்றும் சின்னாளப்பட்டி மையத்திலிருந்து சகோதரி சாவித்திரி ஆகியோர் வந்திருந்து, நிகழ்ச்சியை நடத்தினர். தனது உரையுடன் நிகழ்ச்சியைத் துவக்கிய சகோதரி கஸ்தூரி, குரு, சீடரின் உறவானது, பல பிறப்புக்களாகத் தொடரும் ஒன்று என்று விவரித்தார். நியமங்கள் 5 மற்றும் 7 ன் மூலமாக, துன்பங்கள் கடவுளால் அருளப்பட்ட ஆசிகளே என்பதை, சகோ. பழனியப்பன் அழகாக விளக்கினார். சகோதரி சாவித்திரி, ஒரு அப்யாசிக்கு குடும்ப வாழ்க்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். மதிய உணவுக்குப்பின், சகஜ மார்க்கத்தில் சேர்ந்த பின்பு, ஒருவரிடம் ஏற்பட்ட மாறுதல்கள் பற்றிய குழுக் கலந்துரையாடல் இருந்தது. சகோதரி கஸ்தூரி, தனது சிறிய உரையுடன் அதனை நிறைவு செய்தார். மாலை சத்சங்கத்துடன் நிகழ்ச்சி முடிவடைந்தது.

# காங்டாக் ஆசிரமம், சிக்கிம்

## ஒளி மையம்



சிறிய குன்று பகுதிகளைக் கொண்ட சிக்கிம் மாநிலத்தின் தலைநகரான காங்டாக், கிழக்கு இமாலயத்தின் கஞ்சன்ஜெங்கா மலைப்பகுதியின் மடியில் அமைந்துள்ளது. சிக்கிம் மாநிலம், மூன்று சர்வதேச எல்லைப்பகுதிகளைக் கொண்டுள்ளது - மேற்கில் நேபாலும், வடக்கில் திபெத்தும் மற்றும் கிழக்கு எல்லையில் பூட்டானும் உள்ளது. வேகமான நீரோட்டம் கொண்ட ஓடை, ஆழமான குளங்கள், பனிக்கட்டி பாலங்கள் மற்றும் காடுகள் போன்று பலவிதமானவற்றை இயற்கையின் சிறப்புகளாக இந்த நிலப்பகுதி கொண்டுள்ளது.

நவம்பர் 2005 ஆம் ஆண்டு, ஒரு அப்யாசியின் வீட்டில் தொடங்கிய ஞாயிறு சத்சங்கத்துடன் காங்டாக் மையம் துவங்கப்பட்டது. நவம்பர் 2009ல் மாஸ்டர் காங்டாக் மையத்திற்கு வருகை புரிந்த போது சிக்கிம் ஆசீர்வதிக்கப்பட்டது. இங்கு காங்டாக்கில், மூன்று இன்பமான நாட்களும் மாஸ்டர் மிக்க மகிழ்ச்சியுடன் தங்கியிருந்தார். இந்த பயணத்தின் போது, ஆசிரமத் தேவையின் சிந்தனை வேரூன்றியது.

2011 ஆம் ஆண்டில், 0.33 ஏக்கர்கள் கொண்ட சிறிய நிலத்தை ஆசிரமத்திற்கு வழங்க சிக்கிம் அரசு முடிவு செய்தது. இந்த நிலப்பகுதி காங்டாக் நகரின் முக்கிய இடத்தில் வலப்புறம் அமைந்திருந்தது. மாஸ்டர் இப்பகுதியில் ஆசிரமம் கட்டுவதற்கு அனுமதி வழங்கினார். சாலை வசதியும், எல்லைச் சுவரும் கட்டுவதற்கு 12 செப்டம்பர் 2011ம் நாள் துவங்கப்பட்டது. மனிதனின் மனோபலத்தையும், பற்றுறுதியையும் இயற்கை சோதிக்கிறது. இங்கும் கட்டத்துவங்கி ஆறு நாட்களுக்கு பின் 18 செப்டம்பர் 2011 அன்று சிக்கிமில் ஏற்பட்ட மோசமான நிலநடுக்கம் மூலம் இயற்கை சோதித்தது. இந்த சம்பவத்திற்கு பிறகு ஆசிரமம் நிலநடுக்கங்களால் பாதிக்கப்படாதவாறு கட்டும் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டு, மார்ச் 2012ல் வேலைகள் மீண்டும் தொடர்ந்தது. மேடு பள்ளங்கள் நிறைந்தத் திணை நிலங்கள், கடுமையான மழைப் போன்றவற்றின் சவால்களை, மாஸ்டரின் அருளால் கடந்து வர முடிந்தது. மாஸ்டரின் வழிகாட்டுதலின்படி, கட்டிடத்தின் முன்புறச்சுவர் சுற்றுபுறத்துடன் இணைந்திருக்குமாறு திட்டமிடப்பட்டது. சிறிய நிலப்பரப்பில் ஆசிரமம் கட்டப்பட்டிருந்தாலும், ஆசிரமத்தில் அனைத்து வசதிகளும் உள்ளன. 200 அப்யாசிகள் உட்காரும் வகையில் தியானக்கூடம், தலைவர் அலுவலகம், உணவருந்தும் அறை, சமையல் மற்றும் பண்டகசாலை, ஆசிரம மேனேஜர் தங்கும் குடியிருப்பு, குழந்தைகள் மையம் மற்றும் கழிவறைகள், மேலும் ஒரே சமயத்தில் இருபது அப்யாசிகள் தங்கும் அறை வசதிகளும் ஆசிரமத்தில் உள்ளன.

ஆசிரமத்தின் இரு பக்கத்திலும் இரண்டு சுத்தமான நீரோட்டங்களும், வடமேற்கில் இரு மலைகளுக்கு நடுவில் செல்கின்ற ஓர் அழகான ஆறும் உள்ளன.

சென்னையிலிருந்தே 22 ஜூலை 2013, குரு பூர்ணிமா தினத்தன்று, மாஸ்டர் ஆசிரமத்தை தொடங்கி வைத்தார். காங்டாக் மையத்தின் அப்யாசிகள் ஆசிரமத்தை பற்றிய DVDயுடன் அங்கிருந்தனர். ஆசிரமத்தை துவக்கி வைத்தவுடன், "பாபூஜி அனுமதித்தால், நான் இந்த இடத்தை பார்க்க வேண்டும் கமலேஷ்" என்று கூறினார்.







To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2014 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. “Shri Ram Chandra Mission", "Sahaj Marg", “SRCM”, “Constant Remembrance” and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.